## 71 திசைப்பெயரோடு திசைப்பெயர் புணரும் முறையை எழுதுக

திசைப் பெயரோடு திசைப் பெயர் சேரும்போது நிலைமொழியில் உள்ள 'க்' என்னும் மெய்யும், 'கு' என்னும் உயிர் மெய்யெழுத்தும் கெட்டுப் புணரும், நிலைமொழி ஈற்றுயிர் மெய் கெட்டு, றகரம் னகரமாகியும் யும் புணரும்.

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
குணக்கு + திசை = குணதிசை
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
மேற்கு + காற்று = மேல்காற்று
மேற்கு + ஊர் = மேலூர்

"திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாகத் திரிதலும் ஆம்பிற."

## 72. எண்ணுப் பெயர் எவ்வாறு புணரும்?

எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயரும் பிறவும் வந்து சேரும்போது ஒன்று இரண்டு என்பன முதல் நீளும். மூன்று, ஆறு, ஏழு என்பவற்றின் முதல் குறுகும் இயல்பாகும். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, எட்டு என்பவற்றின் உயிர்மெய் கெடும் ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடும், இயல்பாகும்.

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + கழஞ்சு = ஒருகழஞ்சு
இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + கலம் = முக்கலம்
மூன்று + வகை = மூவகை
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + பத்து = நாற்பது
ஐந்து + மூன்று = ஐமூன்று
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஆறு + தொழில் = அறுதொழில்
ஆறு + முகம் = ஆறுமுகம்
ஏழு + கடல் = எழுகடல், ஏழ்கடல்
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + நூறு = எண்ணூறு

**73. தொண்ணூறு, தொள்ளாயிரம் — புணர்ச்சி விதி கூறுக.**

ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் முன்பு பத்து வந்து சேரும்போது வருமொழியாகிய பத்து நூறாகத் திரியும், முதலில் உள்ள ஒகரம் தகர மெய்யைப் பெறும். நிலைமொழி பது கெடும். னகரம் ணகரமாகிப் புணரும்.

ஒன்பது + பத்து = ஒன்பது + நூறு, தொன்பது + நூறு, தொன் + நூறு, தொண் + நூறு தொண்ணூறு.

ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் முன்பு நூறு என்ற சொல் வந்து சேரும்போது, நூறு ஆயிரமாகத் திரியும். முதலில் உள்ள ஒகரம் தகர மெய்யைப் பெறும் பது கெடும். னகரம் ளகரமாய்த் திரிந்து புணரும்.

ஒன்பது + நூறு = ஒன்பது + ஆயிரம்
தொன்பது + ஆயிரம், தொன் + ஆயிரம்,
தொள் + ஆயிரம், தொள்ளாயிரம்.

**74. ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியை விளக்குக.**

ணகர, னகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ணகரம் டகரமாயும் னகரம் றகரமாயும் திரியும். அல்வழியில் மூவின மெய்கள் வந்தாலும் இயல்பாகப் புணரும.

(எ-டு) மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம் } வேற்றுமை

மண் + பெரிது = மண்பெரிது
பொன் + சிறிது = பொன்சிறிது } அல்வழி

மண் + மாறிற்று = மண்மாறிற்று
பொன் + மிகுந்தது = பொன் மிகுந்தது
மண் + யாது = மண்யாது
பொன் + யாது = பொன் யாது

தனிக் குற்றெழுத்தைச் சாராத ணகர னகர மெய்யீறுகள் முன்பு, வருமொழி முதலில் வந்த நகரம், ணகரமாகவும் னகரமாகவும் திரிந்த இடத்துக் கெடும்.

தூண் + நன்மை = தூணன்மை
ஈரமண் + நன்மை = ஈரமணன்மை
கோன் + நன்மை = கோனன்மை
மெலியன் + நன்மை = மெலியனன்மை
தூண் + நன்று = தூணன்று
ஈரமண் + நன்று = ஈரமணன்று

**75. மகர ஈற்றுச் சொல் வருமொழியோடு புணரும் முறையை விளக்குக.**

மகர ஈற்றுச் சொல் முன் நாற்கணமும் வந்து சேரும்போது, ஈற்று மகர மெய்கெட்டு, உயிர் ஈறாய் நின்று புணரும். வல்லினத்திற்கு இனமாய்த் திரிந்தும் புணரும்.